# பூஜா மண்டபமும்
# பூஜை உபகரணங்களும்
## (சாஸ்திர மஹத்துவமும் அமைப்பும்)

(Temple at home and Implements used in the Worship of God -Tamil)

### முன்னுரை

ஈச்வரபிராப்திக்காக பக்திமார்க்கத்தில் செல்பவர்களில் பலரின் பயணம் ஸகுண உபாஸனையில் ஆரம்பிக்கிறது. இதற்கு வீட்டில் ஒரு பூஜா மண்டபம் இருப்பது அவசியமாகிறது. இன்று பூஜா மண்டபம் அவரவர் சௌகரியத்திற்கேற்ப, வெளிப்-பார்வைக்காக அமைக்கப்படுகிறது. சாஸ்திரக் கண்ணோட்டப்படி அமைக்கப்படுவதில்லை. ஆன்மீகத்தில் ஒவ்வொரு காரியத்தின் பின்-னாலும் ஒரு சாஸ்திரம் உள்ளது. அதாவது சாஸ்திரப்படி செய்யப்படும் காரியத்தில் அதிக ஆன்மீக பலன் விளைகிறது. இந்த நோக்கத்தோடு இந்த கையேட்டில் பூஜா மண்டபத்தின் திசை, நிறம், ரூபம் அமைப்பு மற்றும் தெய்வங்களின் வரிசைக் கிரமம் ஆகியவற்றைப் பற்றிய ஆன்மீக சாஸ்திரம் கொடுக்கப்பட்டுள்ளது. பூஜை உபகரணங்-

களான தட்டு, தீபம், மணி ஆகியவை பகவத் க்ருபையை வாங்கித் தரும் பாலமாக விளங்குகின்றன. தெய்வ பூஜைக்கு முன்னர் உபகரணங்களை ஒரு விசேஷ முறைப்படி வைப்பதால் தெய்வ தத்துவங்களின் பலன் ஏன், எப்படி கிடைக்கிறது என்பதன் ஆன்மீக சாஸ்திரப்படியான விளக்கம் இந்த கையேட்டில் உள்ளது. இதைத் தெரிந்து கொள்வதால் அவற்றின் மீது பக்திபாவம் ஏற்படுகிறது. பக்தி பூர்வமான அந்தக்கரணத்தோடு செய்யப்படும் பூஜையால் தெய்வ தத்துவத்தின் பலன் அதிகமாக கிடைக்கிறது.

இதிலுள்ள சாஸ்திரத்தைப் புரிந்து கொண்டு செயல்படுபவருக்கு ஈச்வர தத்துவத்தின் பலன் அதிக அளவு கிடைக்க வேண்டும் என்று ஈச்வர சரணங்களில் பிரார்த்தனை செய்யப்படுகிறது. – **தொகுத்தவர்**

## அட்டவணை


卐 **முன்னுரை** **7**

卐 **ஆன்மீக மொழியில் ஒரு அணிந்துரை!** **9**

1. பூஜா மண்டபம் எந்த திசை நோக்கி இருக்க வேண்டும்? 11

2. பூஜா மண்டபத்தின் அமைப்பு! 13

3. மண்டபத்தில் தெய்வங்களை எம்-முறையில் வைப்பது? 26

4. பூஜைக்குரிய சாமான்கள் எந்த உலோகத்தில் இருக்க வேண்டும்? 38

5. ஏன் பழைய உபகரணங்களையே உபயோகப்படுத்த வேண்டும்? 40

6. உபகரணங்களின் ஆன்மீக முக்கியத்துவம் 42

7. பூஜைக்குரிய பொருட்களும் அவற்றின் அமைப்பும் 66